International Multidisciplinary Innovative Research Journal
An International refereed e-journal

ISSN: 2456 - 4613
Volume - III (1)
November 2018

# "அவள் விகடன்" இதழ்களில் சமுதாயம் சார்ந்த கவிதைகள்

**சுசிலா.ந**
இணைப்பேராசிரியை, தமிழ்த்துறை
வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்
தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

சமுதாய மாற்றத்தின் வளர்ச்சிக்கு வழித்தடமாக அமைந்த வகை கவிதையாகும். சமுதாய அவலங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்வதற்கு இக்கவிதை வகை இக்காலக் கவிஞர்களுக்குப் பயன்பட்டு வருகிறது. இன்று வெளியாகி வருகின்ற நாளிதழ் முதல் பருவ இதழ்கள் வரையும் கவிதைகள் இடம் பெறாத இதழ்களே இல்லை எனலாம். அந்த வகையில் அவள் விகடன் இதழ்களில் இடம் பெற்றுள்ள சமுதாயம் சார்ந்த கவிதைகளைப் பகுத்து விளக்குவது நோக்கமாகும்.[1]

## சமுதாயம்

''சமூகம் என்பது இயற்கையில் ஒழுங்கின்றித் தோன்றி வளர்ந்த காடன்று. வரம்புக்கோலியும், கால முறைப்படிக் கண்காணித்தும் பேணப்படும் நன்னிலமாகும்''. சமூகம் உருவாகித் தோன்றி வளர்ந்த சூழல்களைப் புலப்படுத்தும் மூடப்பழக்கவழக்கங்களையும் முடிவற்ற கண்ணுறக்கத்தையும் கொண்டிருந்த தமிழ்ச் சமுதாயத்தில் தமிழ் மக்களை விழிப்புற்று எழுச்சி கொள்ளச் செய்வதற்கும் பற்பலச் சிந்தனையாளர்களும் சீர்திருத்தவாதிகளும் தோன்றியவாறே உள்ளனர். இதனால் சமூக மறுமலர்ச்சிச் சிந்தனைகளின் தாக்கம் உலக இலக்கியங்களில் பிரதிபலித்தன. குறிப்பாகக் கவிதைகளின் பாடுபொருள்கள் (Subject Matter) புதிய திசையில், புதிய கோணங்களில் திரும்பின. இத்தகையப் பின்னணியில் இக்காலத் தமிழ்க் கவிதைகளில் சமூகச் சிக்கல்களும், சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளும் சமுதாய மாற்றம் குறித்த கருத்துரைகளும் அடிக்கருத்துகளாக இடம் பெறலாயின.

அவள் விகடன் இதழ்க் கவிதைகள் இன்றையச் சமுதாய அமைப்பு முறை, இளைஞர்களின் நிலை, திருமணம், அவசர வாழ்க்கை, பெண்களை நடத்தும் விதம்,

தாய்ப்பாசம், குழந்தைத் திருமணம் முதலான பாடுபொருளைக் கொண்டு கவிதைகள் தனி மனிதனின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துபவையாகச் சமுதாயச் சிந்தைனகளை உள்ளடக்கிய கவிதைகளாக வெளி வந்துள்ளன.

**இன்றைய சமுதாய அமைப்பு முறை**

சமத்துவ சமுதாயத்தைக் காண்பதே மார்க்சிய இலக்கியப் படைப்பாளிகள் மற்றும் திறனாய்வாளர்களின் நோக்கமாகும். அத்தகைய சமத்துவ சமுதாயத்தைப் படைப்பதற்கும் சமுதாயத்தில் நிகழும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்கும் வர்க்கப் போராட்டப் புரட்சியையே சமுதாய எழுச்சியாகக் கொள்கின்றார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் நாட்டு மக்களிடையே இடம் பெறுமேயானால் பூவும் போர்க்குணம் பெற்றுப் புரட்சியை நிகழ்த்தும், மலையளவு செல்வத்தைக் குவியச் செய்துள்ள செல்வந்தர்கள், வானத்தைக் கூரையாக்கி நிலத்தை அடித்தளமாகக் கொண்ட வீதி வாழ்க்கையாளர்கள் என இருவேறு பிரிவினர்களைக் கொண்டதாக இன்றைய சமுதாய வர்க்கப் பிரிவுகள் அமைந்திருக்கின்றன. சமநிலைச் சமுதாயம் அமையாவிடில் சமுதாயத்தின் கீழ்த்தட்டில் வாழ்கின்ற ஏழை மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கைத் துயரங்களை இச்சமுதாயத்தால் போக்க முடியாது. பாவாடை தாவணிக்குப் பதில் சுடிதாரும் நைட்டியும், பித்தளை குடம் மாறி பிளாஸ்டிக் குடம், கிட்டிப்புள் போய் கிரிக்கெட் எல்லாம் மாறி விட்டன. ஆனால் உலகத்தில் சாதிப்பழக்கம் இன்னும் மாறவில்லையே என்பதை,

“கிழக்குத்தெரு கிருஷ்ணன்
வடக்குத்தெரு வெள்ளைச் சாமியைச்
சாதிப்பேரு சொல்லி திட்டினதால்
அபராதம் கட்டுனாராம்
இன்னும் மாறவில்லை
எங்க ஊர்”[2]

என்று புலம்புகின்றார் ம.பாரதிசேகர். கலப்புத் திருமணங்கள் சமுதாயத்தில் நிலவ வேண்டும். அப்போது தான் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களைய முடியும் என்று கவிஞர்கள் கூறுகின்றனர்.

**இளைஞர்களின் நிலை**

காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை என்னும் அளவிற்கு அனைவரும் காதலைப் பாடுகின்றனர். இலக்கியத்தின் வற்றாத ஊற்றிடங்களுள் காதலும் ஒன்றாகும். காலம், மொழி, இனம், நாடு, மதம் ஆகியவற்றை மீறிய மனித உறவே காதலாகும். இன்றைய சமுதாயத்தில் காதல் தொடர்பான சிக்கல்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன.

கவிதாகுமாரன் எழுதிய ‘ஓரிலை’ என்ற கவிதை காதல் எதிர்படும் தலைவியின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் காதலன் எண்திசையிலும் எதிர்கொண்டு ஏமாந்த

கண்களுடன் அவள் பாதச் சுவடுகள் கண்டு இளைப்பாறும் முனைப்புடன் காத்திருக்கின்றான். இதனை,

"அழைப்பதும் இழப்பதுமாய்
நான் மட்டுமா விளையாடிக் கொண்டிருக்கிறேன்
காதல் கண்ணாமூச்சி"[3]

காதல் மொழியினை ஏற்க மறுக்கின்றாள் காதலி. இதனை சு.கவிதா,'மவுனமே' என்னும் கவிதையில்,

"சட்டெனச் சொல்லிவிட்டாய்
உன்னை நேசிக்கிறேன் என்று
சொல்ல நாணமெனக்கு
சொல்லாததால் கோபமுனக்கு"[4]

இவ்வாறு காதல் கொள்கின்ற இளைஞர்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை கொள்ளவில்லையே என வருந்துகின்றார்.

**திருமணம்**

சமுதாயத் தொடர் வாழ்வில் பருவம் எய்திய ஓர் ஆணும் பெண்ணும் ஈடுபடுவதற்கான இணைப்பு திருமணமாகும். உலகிலுள்ள எவ்வகைச் சமுதாயத்திலும் பன்னெடுங்காலமாக இந்த முறை இருந்து வருகின்றது. மன உணர்வோடு கூடிய மானிட வாழ்வியல் அறிவு வளர்ச்சிக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்ப இப்பிணைப்பு இன்றியமையாததாகி, அனைத்துச் சமுதாயங்களிலும் காலம், இடம், சூழல் ஆகியவற்றிற்கு இயையும் வகையில் இடம் பெற்றுள்ளது.

மக்களை மாக்களிடமிருந்து பிரித்துக் காட்டும் காரணிகளுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. இல்லறத்திற்குரிய பண்புகளுடன், பொருள் வளத்துக்குக் தக்கவாறு குடும்பம் நடத்துபவள், கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாவாள் பெண். என்பதை,

"மணமேடையில்
உங்கள் கையைப் பிடித்தபடி
அக்னியை வலம் வருகையில்
யாருக்கும் தெரியாமல்
நீங்கள் என்னைக் கிள்ளியதைப்
பார்த்து விட்ட அக்னி
என்னிடம் சொன்னது
இவன் உன்னை
கைவிட மாட்டான் என்பதற்கு
இந்தக் கிள்ளலே சாட்சி என்று"[5]

இக்கவிதை உணர்த்துகிறது.

**அவசர வாழ்க்கை**

அவசரக் குளியலோடு ஐந்து புள்ளிக்கோலம், தண்ணீரில் நடக்கும் யுத்தக் காலம். மகளைக் குளிக்க வைத்துச் சீருடை மாட்டி, உணவூட்டிப் பள்ளிப் பேருந்தில் ஏற்றிக் கொண்டு திரும்புகையில் கண்களில் படும் குடிக்க மறந்து ஏடு படிந்த காபியுடன் தலைவாரிக் கொண்டு முகம் திருத்திக் கொண்டு கடிகார முட்களின் துரத்தலில் உணவை விழுங்கையில் நினைவிற்கு வரும் வார் அறுந்த கைப்பை இப்படியாக ஒவ்வொரு நாளும் செல்வதை வேலைக்குப் போகும் பெண்கள் கொடுத்து வைத்தவர்கள் என சாய்ரா குறிப்பிடுகின்றார்.

"இருப்பினும்
வேலைக்குப் போகும் பெண்கள்
கொடுத்து வைத்தவர்கள் எனும்
தோழியின் கூற்றுக்குப் பதிலாய்
எப்போதும் இதழ்களில் வந்தமர்கிறது
ஆயத்தப் புன்னகை ஒன்று"[6]

என அவசர வாழ்க்கையைச் சாய்ரா இவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றார்.

**பெண்களை நடத்தும் விதம்**

என்னதான் ஆண், பெண் சமத்துவம் எனப் பேசினாலும், பெண்கள் தங்கள் எண்ணங்களையும் சிந்தனைகளையும் விருப்பங்களையும் செயற்படுத்த முடியாத நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். என்றாவது உண்மையான சுதந்திரம் பெண்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பாடுபொருட்களில் ஒன்றாகப் பெண்ணியம் தொடர்பான சிந்தனைகளும் இடம் பெறுகின்றன. பெண்களின் நடைமுறைச் சிக்கலான வரதட்சணைக் கொடுமை, அவலம், துயரம், வன்முறைகள் போன்றவை கவிஞர்களின் கவிதைகளில் பரவலாகக் காண முடிகின்றது. பெண் குழந்தைகளின் கனவு நிறைவேறுவதில்லை என்பதைப் பின்வரும் கவிதை சுட்டுகின்றது.

"மடிப்புக் கலையாம
நீ டீச்சர் வேலைக்குப் போனா
இங்கே ஆக்கிப் போடுறது ஆரு? என்று
ஒரே அதட்டலில்
என் ஆசிரியை கனவை
நீ சுருக்கிப் போட்டதை அறிவாயா?"[7]

மற்றொரு கவிதையில், நாள்தோறும் அலுவலகக் கோப்புகளை எடுத்துக் கொடுக்கவும், வங்கி வட்டி விகிதத்தை டாலரின் வெளி மதிப்பை மாற்றிக் கொடுக்கவும் நீ வேண்டும்.

படித்தவற்றைச் சரிவர புரிய வைக்க நீ வேண்டும். தம்பியின் வேலை, தங்கையின் காதல், அப்பாவின் ஆயுள் காப்பீடு அனைத்துக்கும் அறிவுரை வழங்க நீ வேண்டும். ஆனால்?

"இத்தனையும் தாண்டி
சின்னதாய் வெடிக்கும்
திடீர் சண்டையொன்றில்
சமையலும் கறிகாயும் தவிர
உனக்கென்ன தெரியும்…
அசடு…"[8]

ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண் புறக்கணிக்கப்படுபவளாக விளங்குகின்றாள்.

**தாய்ப்பாசம் தெரியாத குழந்தைகள்**

"பாத்திரம் தேச்சு
பசி பழகி
பெரிய பெரிய படிப்பெல்லாம்
படிக்கவச்ச மகன் கேட்டான்
படிக்காதவ…
உனக்கென்ன தெரியுமுன்னு!"[9]

படிப்பின் அருமை உனக்கு என்ன தெரியும் என்று மகன் கேட்கிறான். ஆனால் கடினப்பட்டு படிக்க வைத்தவள் இந்தப் படிக்காத தாய் தான் என்பதை அவன் மறந்து விட்டான். மற்றொரு கவிதையில் மகள் காதல் வயப்பட்டிருக்கிறாள். அதைக் கண்டித்தால் மகள் சொல்லுகின்றாள் அன்பு என்றால் என்ன என்று கேட்கிறாள்.

"புருஷன் கொள்ளி வச்சு
ஆசைய தள்ளி வச்சு
ராப்பகலா பொத்தி வளர்த்த
ராசாத்தி எம் மகளும்
காதல் வேகத்துல பேசிட்டா
அன்புன்னா என்னன்னு
தெரியுமானு"[10]

என்கிறாள். பாடம் என்றால் என்ன என்று கேட்பது மகளின் பொறுப்பற்றத் தன்மையைக் காட்டுகிறது.

**குழந்தைத் திருமணம்**

மழையின் நசநசப்பில் ஊறிப்போன மண்ணில் எட்டிப் பார்த்த என் புத்தகத்தின் தாள். சிறுவன் ஒருவன் விசிலாய் ஊதிய மை காய்ந்த என் பேனா மூடியோடு, அடுப்பங்கரையில் பிடித்துணியாய் கிடந்த என் நீலநிற புத்தகப் பையுடன், தம்பிக்குத் தொட்டிலாய் கூடத்து

முற்றத்தில் கட்டப்பட்டிருந்த என் சீருடை, பருவத்தில் இருக்கும் பெண் குழந்தைக்குத் திருமணம் செய்து கொடுக்கும் கொடுமையை வன்மையாகச் சாடுகின்றார் பாஜீயா.

"இதோ
தாலியாய் உருமாறியிருக்கும்
என் பத்தாம் வகுப்பு
தங்கப் பதக்கம்"[11]

பள்ளி செல்லும் குழந்தைக்குத் திருமணம் நடைபெறுவதை இக்கவிதையில் கவிஞர் காட்டியுள்ளார்.

**முடிவுரை**

சமுதாய மறுமலர்ச்சிக்குத் தமிழ்க் கவிதைகள் பெரும் பங்கினை ஆற்றி வருகின்றன. சமுதாயத்தில் மனித நேயம் சாகடிக்கப்படும் போதெல்லாம் சமுதாயப் பற்றுள்ள உண்மைக் கவிஞனின் இதயமும் உடைந்து உதிரம் கொட்டுகிறது. அந்த வகையில் சமுதாய மாற்றத்தின் வளர்ச்சிக்கு இதழ்களின் பங்கும் மகத்தானது.

**அடிக்குறிப்புகள்**

1. கு.வெ.சுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள், முன்னுரை
2. அவள் விகடன், மனிதன் மாறவில்லை, பிப்ரவரி 29, 2008. ப.33.
3. மேலது, ஓரிலை, பிப்ரவரி 27, 2004. ப.51.
4. மேலது, மவுனமே, பிப்ரவரி 27, 2004. ப.51.
5. மேலது, புருஷ லட்சணம், நவம்பர் 04. 2004. ப.67.
6. மேலது, சலித்துப் போன கிழக்கு, ஜீன் 8, 2007. ப.29.
7. மேலது, கண்ணுக்குத் தெரியாத கண்ணீர், மார்ச் 11, 2005. ப.12.
8. மேலது, நன்றி கெட்ட நாக்கு, ஜீலை 04, 2008. ப.35.
9. மேலது, சிறகு முளைத்த பூக்கள், டிசம்பர் 19, 2008. ப.37.
10. மேலது, ப.38.
11. மேலது, தகிக்கும் தடயங்கள், மார்ச் 30, 2007. ப.66.